# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C.C. No. 83/2025** |
| Prosecution witness | : | P.W. 5 |
| List of witness | : | L.W.8 |
| Name | : | **கணேசன்** |
| Father's /Husband Name | : | **கோவிந்தசாமி** |
| Village | : | **நன்னிலம் காவல் நிலையம்** |
| Taluk | : | **நன்னிலம்** |
| Age | : | 59 |
| Occupation | : | **உதவி ஆய்வாளர்** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, 16th day of April 2026. Accused present.

**முதல் விசாரணை**

நான் தற்போது நன்னிலம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 15.06.2024 ம் தேதி அன்று நான் குடவாசல் காவல்நிலையத்தில் நிலைய பொறுப்பிலிருந்தபோது ராயப்பன் மகன் சிலம்பரசன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று காவல் நிலைய குற்ற எண். 212/2024 இதச சட்டபிரிவுகள் 386, 506(2) ன் கீழ் எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(புகார் மனு அ.சா.ஆ 2 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும் குறியீடுசெய்யப்படுகிறது.)**

பின்னர் இவ்வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு வாதியை விசாரித்தபோது எதிரி அவர்களிடமிருந்து தப்பிக்க முயன்ற போது எதிரியின் கையில் வைத்திருந்த கத்தி கீழே விழுந்தததை வாதி காவல் நிலையத்தில் புகாருடன் கத்தியையும் கொடுத்தார். அந்த கத்தியானது சுமார் **21 செ.மீ. நீளமுடைய நீல நிற பிளாஸ்டிக் கைப்பிடியுடன் கூடிய கத்தி.** அதை அன்றைய தினமே 11.10 மணியளவில் சாட்சிகள் வினோத் மற்றும் சக்தி ஆகியோர்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றி மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். **(கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.4 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.)**

பின்னர் அன்றைய தினமே 11.30 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் காந்தி, ஜெகன்நாதன் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். **(பார்வை மகசர் மற்றும்**

**மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 மற்றும் 6 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.)** மேற்படி பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலான சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளேன்.

பின்னர் சம்பவம் உண்மை என்று தெரிய வந்த நிலையில் எதிரியை தேடிவந்த நிலையில் எதிரி குடவாசல் பேருந்து நிலையம் அருகே நின்று கொண்டிருந்தவரை அன்றைய தினமே 13.30 மணியளவில் குற்ற காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற அடைப்புகாவலுக்கு உட்படுத்தினேன் மேலும் எதிரி பயன்படுத்திய தடயப்பொருட்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்து அது நீதிமன்ற வழக்கு சொத்தாக C.P. No. 116/2025 ஆக கோப்பில் எடுக்கப்பட்டுள்ளது. **(படிவம்.91 அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது, தடயப்பொருட்கள் சா.பொ.ஆ 1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.)**

இத்துடன் எனது புலன் விசாரணை முடித்து எதிரியின் செய்கையானது இதச சட்டபிரிவுகள் 386, 506(2) ன் கீழ் தண்டித்தக்க குற்றம் என கடந்த 30.11.2024 ம் தேதி அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** :-

அ.சா.1 உங்களிடம் எந்த வித புகாரும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்ன நாளில் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் எதிரியை கைது செய்யவில்ல என்று சொன்னாலும் சரியல்ல. இவ்வழக்கில் உள்ள அனைத்து ஆவணங்களும் சம்பவ இடம் செல்லாமல் சாட்சிகளை விசாரணை செய்யாமலும் காவல் நிலையத்திலேயே தயார் செய்யப்பட்டு குற்ற இறுதி அறிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புள்ளிவிவரத்திற்காக எதிரிகள் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றாலும் எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.04.16 17:25:48 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.